வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 205 of 2014

வழக்கு சாட்சி - PW 3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.செல்வராஜ் | தொழில் | : | |
| தந்தை பெயர் | : | பழனிச்சாமி | வயது | : | |
| கிராமம் | : | | | | |
| தாலுக்கா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 01.06.2026.

(எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் சார்பில் சட்டப்பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது).

அரசு தரப்பில் அ.சா.3 மறுவிசாரணை செய்ய மனுதாக்கல் செய்ய அனுமதிக்கப்பட்டது

**மறு விசாரணை :** **நாள் : 01.06.2026.**

1) க.சா.எண் 506/1A என்ற பூமி மொத்தம் 6 ஏக்கர் 97 சென்ட் எனது தகப்பனார் பழனிச்சாமி கவுண்டருக்கு பாத்தியப்பட்டதாகும். பழனிச்சாமி கவுண்டர் முதல் தாரத்திற்கு சின்னசாமி, சுப்பிரமணி, வள்ளியம்மாள், சுப்பாத்தாள் மற்றும் இரண்டாம் தாரமான ராசம்மாளுக்கு செல்வராஜ், ருக்குமனி, செல்வி , அமிர்தவள்ளி ஆகியோர் ஆவர். இந்த சொத்தை இரண்டு பாகமாக பிரித்துள்ளோம். இந்த சொத்தில் ராசம்மாள் வகையாருக்கு மொத்தம் 3.66 ஏக்கரும், சின்னசாமி வகையாருக்கு 2.93 ஏக்கரும் உள்ளது. மேற்படி சின்னசாமிக்கு சொந்தமான இடத்தில் பழனிச்சாமிக்கு சின்னசாமி வகையரா கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள்.

2) பின்னர் 2010 ஆம் வருடத்தில் பல்லடம் உரிமையியல் நீதிமன்றத்திற்கு வந்தபோது பழனிச்சாமிக்கு சொந்தமான 2.93 ஏக்கர் நிலத்தினை கிரையம் செய்து கொடுப்பதாக பத்திரப்பதிவு அலுவலகத்தில் கேட்டுக்கொண்டிருந்தார்கள். அதை நான் பழனிச்சாமிக்கு

தகவல் தெரிவித்தேன். அப்போது அந்த சொத்தானது கோயம்புத்தூர் சப் ஜட்ஜ் கோர்டில் நிலுவையில் உள்ளது. என்னிடம் வாங்கிய சொத்திற்கு வசந்தி பணம் தர வேண்டியுள்ளது. பழனிச்சாமி சொத்திற்கும் மற்றும் இதர சொத்துகளுக்கும் சுப்பிரமணி மற்றும் வசந்திக்கும் பணம் கொடுக்கவேண்டியது சம்மந்தமாக வழக்கு நிலுவையில் உள்ளது.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>** :

எதிரி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கினங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA Digitally signed by S SAPNA Date: 2026.06.01 18:01:42 +0500

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.

01.06.2026